# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2272 - 2022 මාර්තු මස 18 වැනි සිකුරාදා - 2022.03.18

*2272 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 450 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.**- குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2022, மாச்சு மாதம் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மாச்சு மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


447-B 82325-5,413 (2022/ 03)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி மூல பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது)
பதிவாளர் பதவி – கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 70 ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 24.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு பிரிவின் வெள்ளவத்தை பிரதேசத்தின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு |
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பிரிவின் புனித செபஸ்தியன் பிரதேசத்தின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு |

*03-129*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி மூல பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.*

*2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.*

*3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 70 ஆகும்.)*

*4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்திபெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.*

**கருத்திற் கொள்ளவும்.**- *க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.*

*5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.*

7. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பாணந்துறை | வாத்துவ நகரப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

03-130

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி மூல பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கம்பஹா மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 70 ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு நகரம் (வைத்தியசாலைக்கு வெளியில்) பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

03-131

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரியின் வயது 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவராக அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் /தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் மூன்றுடன் (03) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.– க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 24.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுன பிரிவின் மரதான பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், களுத்துறை |

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுன பிரிவின் எளுவில பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |
| களுத்துறை | பாலிந்த நுவர | கிழக்கு பஸ்துன் கோறளைப் பிரிவின் பெலேன பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை பிரிவின் மக்கொனபத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுன பிரிவின் மிஹிரிபென்ன பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுன பிரிவின் மிஹிரிபென்ன பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |
| களுத்துறை | பேருவளை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுன பிரிவின் தர்கா நகரம் பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |
| களுத்துறை | புளத்சிங்கள | கிழக்கு பஸ்துன் கோறளைப் பிரிவின் வேயன்கல்ல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |
| களுத்துறை | பாணந்துறை | களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுன பிரிவின் தொட்டவத்த பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

03-132

---

## கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

### அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்

ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்பவியல் (PL 2) சேவை வகுதியின் (திறந்த) ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்களைக் கோரல் - 2022

அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பின்வரும் ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| தொடரிலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | வெற்றிடங்கள் |
|---|---|---|
| 1 | அலுமினியம் தயாரிப்பு உதவியாளர் - Aluminum Fabricator Assistant | 02 |
| 2 | கட்டுமானத் தொழில் (கொத்தனார்) உதவியாளர் - Mason Assistant | 01 |
| 3 | கிறைன் சாரதி - Overhead Crane Operator | 02 |
| 4 | ஃபெல்டர் - Fetler | 03 |
| 5 | உதவி இயந்திர இயக்குநர் (உற்பத்தி) (Machine operator (production) Assistant) | 01 |
| 6 | ஹுட் வேலை உதவியாளர் - Hood maker & Upholster Assistant | 01 |
| 7 | பெனார்ஸ் வேலை உதவியாளர் - Furnacemen Assistant | 01 |
| 8 | அச்சு வார்ப்பு உதவியாளர் - Molder Assistant | 04 |
| 9 | வார்ப்பு வடிவமைப்பு உதவியாளர் - Pattern Maker Assistant) | 01 |
| 10 | கெமிகல் கிளீனர் (பவுடர் கோர்ட்டின்) - Chemical Cleaner (Powder Coarting) | 02 |
| மொத்தம் | | 18 |

*3.* **சம்பள அளவுத்திட்டம்**.-

3.1 சம்பளக் குறியீட்டு இல. : PL 2 - 2016

3.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 25,250.00 - 10 × 270 - 10 × 300 - 10 × 330 - 12 × 350 - ரூபா 38,450.00

4. **பதவியின்/பதவிகளின் தன்மை**.- நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதமாகும். (ஓய்வூதியம் முறை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.)

5. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம்** : தரம் III

6. **மொழிமூலம்** : சிங்களம் மற்றும் தமிழ்

7. **பணிக்கப்படும் கடமைகளும் பொறுப்புக்களும்** :-

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | கடமைகள் |
|---|---|
| அலுமினியம் தயாரிப்பு உதவியாளர் | அலுமினிய பார்டிசன்களைப் பொருத்தவதற்கான செயற்பாடுகளுக்கு உதவி செய்தல். |
| கட்டுமானத் தொழில் (கொத்தனார்) உதவியாளர் | கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானங்களுக்குத் தேவையான அனைத்து கட்டுமான செயற்பாடுகளுக்கு உதவுதல். |
| கிறைன் சாரதி | இயந்திரங்களை மற்றும் மின் கிறைன்களை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறு சிறு பராமரிப்பு வேலைகளைச் செய்தல். |
| ஃபெல்டர் | அச்சு வார்ப்புகளை பெற்று அச்சுப் பகுதிகளை உரிய முறையில் பயன்படுத்திப் அப்பகுதிகளை தூய்மைப்படுத்தல். |
| உதவி இயந்திர இயக்குநர் (உற்பத்தி) | ஆணிகள் தயாரிக்கும் இயந்திரம், இரம்பம் ஆகிய இயந்திரங்களை புதுப்பித்து இயக்குதல் மற்றும் சிறு சிறு பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு உதவுதல். |
| ஹுட் வேலை உதவியாளர் | அனைத்து குஷன் வேலைகளை செய்தல். திரைச்சீலைகள் தைத்து பொருத்துதல், விழாக்களில் கார்பட் மற்றும் மடிப்பு பாலங்களை விரித்தல் செயற்பாடுகளுக்கு உதவுதல். |
| பெனார்ஸ் வேலை உதவியாளர் | சகல அச்சு வார்ப்புகளுக்குத் தேவையான பெனார்ஸ்களை செயற்படுத்தல் மற்றும் பெனார்ஸ்களை புதுப்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவுதல். |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | கடமைகள் |
|---|---|
| அச்சு வார்ப்பு உதவியாளர் | சகல அச்சு வார்ப்புகளுக்குத் தேவையான வார்ப்பு அச்சுகளை தயாரித்தல், அச்சு வார்ப்பிற்கான ஆயத்தங்களை செய்தலும் அச்சு வார்ப்பு செயற்பாடுகளுக்கு உதவுதல். |
| வார்ப்பு வடிவமைப்பு உதவியாளர் | வார்ப்பு அச்சுகளை தயாரிப்பதற்குத் தேவையான வார்ப்பு வடிவமைப்புகளை மரப்பலகைகளில் தயாரித்தலுக்காக உதவுதல். |
| கெமிகல் கிளீனர் (பவுடர் கோர்ட்டின்) | பவுடர் கோர்ட்டினை இடவுள்ள பொருட்களை கெமிகல் இட்டு சுத்தப்படுத்தல் மற்றும் பவுடர் கோர்ட்டின் செய்யும் போது உரிய செயற்பாடுகளுக்கு உதவுதல். |

8. இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் கால அடிப்படையிலானது. நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலத்தை நீடிப்பதற்கு அல்லது நியமனத்தை முடிவுறுத்துவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

9. **தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள் :** கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு** .- 28/2016 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் படி துறைக்கான NVQ மூன்றாம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருப்பின் I ஆம் இலக்கத்தின்கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமை உரித்தாகாது.

II. **தொழிற் தகைமைகள் :** ஒவ்வொரு பதவிக்கான கடமைகளுக்கும் பொறுப்புகளுக்குமான மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற் திறமையில் இரண்டாம் மட்டத்திற்குக் குறையாத (NVQ 02) மட்டத்தில் தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் சிறந்த முறையில் எழுத்து மற்றும் வாசிப்பு ஆற்றல் இருத்தல் வேண்டும்.

அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் (திறந்த) ஆட்சேர்ப்பிற்கான தொழில்சார் தகைமைகள்

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|
| அலுமினியம் தயாரிப்பு உதவியாளர் | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அலுமினியம் தயாரிப்பு தொடர்பாக ஆகக் குறைந்தது 02 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். |
| கட்டுமானத் தொழில் (கொத்தனார்) உதவியாளர் | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் கட்டுமான தொழில் தொடர்பாக ஆகக் குறைந்தது 02 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். |

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்* | *தொழில்சார் தகைமைகள்* |
|---|---|
| கிறைன் சாரதி | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் மின் கிறைன் இயக்குதல் தொடர்பாக ஆகக் குறைந்தது 02 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். |
| ஃபெல்டர் | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றில் 02 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். |
| உதவி இயந்திர இயக்குநர் (உற்பத்தி) | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பிலான இயந்திரங்களை இயக்குதல் குறித்து 02 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல். |
| ஹுட் வேலை உதவியாளர் | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 02 வருட அனுபவம் தொடர்பான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். |
| பெனார்ஸ் வேலை உதவியாளர் | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 02 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். |
| அச்சு வார்ப்பு உதவியாளர் | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத அச்சு வார்ப்பு பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அச்சு வார்ப்பவராக 02 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல். |

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்* | *தொழில்சார் தகைமைகள்* |
|---|---|
| வார்ப்பு வடிவமைப்பு உதவியாளர் | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத வார்ப்பு வடிவமைப்பு பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் வார்ப்பு வடிவமைப்பு தயாரிப்பு தொடர்பாக 02 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல். |
| கெமிகல் கிளீனர் (பவுடர் கோர்ட்டின்) | I. NVQ இரண்டாம் மட்டத் தேர்ச்சியை பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத பவுடர் கோர்ட்டின் பாடநெறியைப் பயின்று சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 02 வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டிருத்தல். |

III. **அனுபவம் :** குறித்த துறையில் காணப்படும் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

IV. **உடல்சார் தகைமைகள் :** சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

V. **ஏனையவை :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
II. விண்ணப்பதாரர்கள் நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;
III. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்காக அவசியமாகின்ற தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*10.* **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*11.* **ஆட்சேர்ப்பு முறை.**- தேகாரோக்கியம் தொடர்பான நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் செயன்முறைப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளில் திறமைகளின் ஒழுங்கு வரிசைப்படியும் காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *புள்ளிகள் வழங்கப்படும் முறை* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | * க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையின் ஒரு பாடத்திற்கு 3 புள்ளிகள் வீதம் 3 பாடங்களுக்கும் 09 புள்ளிகளும் | 09 புள்ளிகள் |
| | | * அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா அல்லது அதற்கு உயர்வான தகைமை களைப் பெற்றிருப்போருக்கு 03 புள்ளிகள் | 03 புள்ளிகள் |
| | | * முழுநேர பாடநெறியை 06 மாதங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மணித்தி யாலங்களைப் பூர்த்தி செய்த சான்றிதழ் பாடநெறிக்காக 03 புள்ளிகள் | 03 புள்ளிகள் |

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | புள்ளிகள் வழங்கப்படும் முறை | புள்ளிகள் |
|---|---|---|---|
| மேலதிக தொழிற் தகைமைகள் | 35 | ஒவ்வொரு துறையிலும் எதிர்பார்க்கும் தகைமையில் NVQ 3 அல்லது அதற்கு மேலதிக தகைமைகளுக்கு 25 புள்ளிகள் உரித்தாகும். | 25 புள்ளிகள் |
| | | ஏனைய துறைகளில் NVQ 3 அல்லது அதற்கு அதிகமான தகைமைகளுக்காக 10 புள்ளிகள் உரித்தாகும். | 10 புள்ளிகள் |
| மேலதிக அனுபவம் | 45 | அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க/ தனிப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறையில் அனுபவத்தை ஆகக்கூடியது 05 வருடங்கள் வரை ஒரு வருடத்திற்கு 09 பள்ளிகள் உரித்தாகும். | 45 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் காண் பிக்கப்படும் திறமைகளின் தலைமைத்துவம், எண்ணங் கள், ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைக்காக வழங்கப்படும் புள்ளிகள் | 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். | 05 புள்ளிகள் |
| மொத்தம் | 100 | | |

**குறிப்பு** .- பதவிக்குரிய அனுபவங்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் மூலம் சான்றுப்படுத்தல் வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

தொழில்சார் செயன்முறை பரீட்சை

| விடயப் பரப்பு | காலம் | மொத்த புள்ளி | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|
| விடய அறிவு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்ப சேவை வகுதியின் (திறந்த) ஆட்சேர்ப்பிற்கான தொழில்சார் செயன்முறை தகைமைகள்

| பதவிப் பெயர் | விடயப்பரப்பு |
|---|---|
| அலுமினியம் தயாரிப்பு உதவியாளர் | செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>* பொருட் கண்காட்சிக்கான அலுமாரியைத் தயாரித்தல்.<br>* குளியலறைக்கான மறைப்புகளைத் தயாரித்தல் மற்றும் பொருத்துதல்.<br>* கூரைக்கான சிவிலின் தயாரித்து பொருத்துதல். |
| கட்டுமானத் தொழில் (கொத்தனார்) உதவியாளர் | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>* கற்சுவர் கட்டுமான வேலைகள் (றபல் கட்டுமானம்)<br>* செங்கல்/பிளக் கல் கட்டுமான வேலைகள்<br>* ஈரமான மேற்பரப்பினை அமைத்தல்<br>* மட்டமான மேற்பரப்பு வேலைகளைச் செய்தல் |

| *பதவிப் பெயர்* | *விடயப்பரப்பு* |
|---|---|
| கிறைன் சாரதி | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>* கிறைன் இயந்திரத்தை இயக்குதலுக்காக ஆயத்தஞ் செய்தல்<br>* பாரம் தூக்கும் இயந்திரம் மூலம் பாரத்தை உரிய முறையில் இணைத்து ஒழுங்குபடுத்தல்<br>* பாரத்தை உரிய முறையில் கையாளுதல்<br>* சிறு சிறு இணைப்பு வேலைகள் மற்றும் சிறு சிறு பழுதுகளை சரிபார்த்தல் |
| ஃபெல்டர் | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>* வார்ப்பின் போது ஃபெல்டர் கிரைண்டிங் இயந்திரங்களின் மூலம் வெட்டி பூரணப்படுத்தும் ஆற்றல் வேண்டும்.<br>* வழங்கப்படும் வேலையை ஆயுதங்களைப் பயன்படுத்தி தரநிர்ணயத்திற்கு அமைய சுத்தப்படுத்தல் |
| உதவி இயந்திர இயக்குநர் (உற்பத்தி) | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>* இரும்பில் வடிவங்களை அமைக்கும் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் நாளாந்த பராமரிப்பு செயற்பாடுகளை செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.<br>* போல்ட் ஆணி வடிவங்களை அமைக்கும் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளை செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.<br>திரவ அழுத்த இயந்திரங்களை (Liquid Pressure Machines) இயக்குதல் மற்றும் நாளாந்த பராமரிப்பு செயற்பாடுகளை செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். |
| ஹுட் வேலை உதவியாளர் | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>* தையல் இயந்திரத்தை இயக்குதல் மற்றும் கையினால் தைக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>* வாகனமொன்றின் ஆசனங்களை குஷன் செய்வதற்காக அடையாளம் இட்டு வெட்டி தயாரித்தல் மற்றும் பக்க கண்ணாடிகளுக்கான பிரேம் தயாரித்தல்.<br>* வாகனமொன்றின் மேற்பகுதிக்காக (கூரை) மற்றும் பக்கங்களுக்காக யன்னல் கன்வஸ் பயன்படுத்தி தயாரித்தல் அல்லது தேவையான பர்ச் (patch) வேலைகளை செய்தல். |

| *பதவிப் பெயர்* | *விடயப்பரப்பு* |
|---|---|
| பெனார்ஸ் வேலை உதவியாளர் | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br><br>* தரப்படும் விவரக்குறிப்பிற்கு அமைய பெர்னாஸ்/ கியூபோலாவை இயக்குதல் தொடர்பாக தேவையான மூலப்பொருட்கள் உலோகங்களின் நியம எடையை அறிந்து நிறையிட்டு பெர்னாஸ்/ கியூபோலாவை இயக்குதல்.<br><br>* பெனார்ஸ் இனை இயக்குதலை ஆரம்பித்து தேவையான உலோகப் பகுதிகளை உருக்கி கழிவுப்பொருட்களை அகற்றி ஆவியாகும் உலோகத்தைப் பெற்று பெனார்ஸ் இற்கு பொறுப்பான மேற்பார்வை உத்தியோகத்தரினால் வழங்கப்படும் ஆலோசனையின் படி அதனை நிறுத்துவதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>* கியூபோலாவ மற்றும் பெனார்ஸ் இனை இணைக்கும் பிளோவசர், பெனார்ஸ் இனை உயர்த்தும் மற்றும் மூலப்பொருட்களை உள்ளடக்கும் உபகரணங்களும், எடை பார்க்கும் அனைத்து இயந்திரங்களையும் இயக்குவதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>* பெனார்ஸ்/ கியூபோலாவ/ லேடல் மீண்டும் வார்ப்பு செய்வதற்காக தயார் செய்தல் மற்றும் புதுப்பித்தலும் அடுப்பினை அணைப்பதற்கு அவசியமான பயர் கிலே பிளேக் இனை தயாரித்தல். |
| அச்சு வார்ப்பு உதவியாளர் | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br><br>* ஈர மண் மற்றும் உலர்ந்த மண்ணைப் பயன்படுத்தி இரண்டு அல்லது மூன்று பகுதிகளில் நடுத்தர அளவில் அச்சு வார்ப்பினை பெரஸ் அல்லது நிபெரஸ் வார்ப்பிற்காகத் தயாரிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>* தயாரிக்கப்பட்ட அச்சு வார்ப்பு பரிசோதனையில் திருப்திகரமான முறையில் பயன்படுத்தல் வேண்டும்.<br><br>* பெரஸ் மற்றும் நிபெரஸ் வேலைகளுக்காக பயன்படுத்தும் ஈர மண் மற்றும் உலர்ந்த மண்ணை ஏற்றுக்கொள்ளப்படும் விகிதாசரங்கள் மற்றும் மண் கலப்புகளை பற்றி அறிந்திருப்பதோடு அவற்றைப் தயாரிப்பதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>* எளிய இரண்டு பகுதிகளாக அச்சு வடிவங்களை அமைத்தல், இணைத்தல் ஆகியவற்றை கைகளினாலோ இயந்திரங்களைப் பயன்படுத்தி வடிவமைக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும். |
| வார்ப்பு வடிவமைப்பு உதவியாளர் | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br><br>* கோர் பிரின்ட்டினை பயன்படுத்துவதற்கு உரியதாக வழங்கப்படும் வரைபடத்திற்கு அமைவாக வார்ப்பு வடிவமைப்பினை செய்தல்.<br><br>* 2 1/2" × 1/2" ரீ மோட்டர் மற்றும் டென்ட் ஜொயின்டை பரீட்சிப்புக் காலத்தினுள் செய்து முடித்தல். |

| பதவிப் பெயர் | விடயப்பரப்பு |
|---|---|
| கெமிகல் கிளீனர் (பவுடர் கோர்ட்டின்) | செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>* பெரஸ் அல்லது நிபெரஸ் உலோகத்திற்கான சுத்திகரிப்பினை செய்கையில் மிகவும் பொருத்தமான பொதுவாகப் பயன்படுத்தும் சுத்திகரிப்பு செய்யும் முறை தொடர்பாக அறிந்திருத்தல் வேண்டும்.<br>* பவுடர் பூசும் மேற்பரப்பினை தூய்மைப்படுத்தி மீண்டும் பவுடரை பூசுவதற்கு இரசாயன தூய்மைப்படுத்தும் முறை தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்.<br>* சிறந்த தரத்தில் பொஸ்பேட் கவர் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் முறை பற்றிய அறிவு இருத்தல் வேண்டும். |

12. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்கையில் கவனமாக சரியானத் தகவல்களை வழங்குதல் வேண்டும். தகைமைகளை பரிசீலிக்கும் போது ஏதேனுமொருவர் தகைமையற்ற விண்ணப்பதாரி என தெரியவருமாயின், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது என அறியக் கிடைத்தால் அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

13. குறித்த மாதிரி படிவத்திற்கு அமைவாக விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்திசைவாக அமையாத விண்ணப்பப்படிவங்கள் பூரணமற்ற நிலையில் காணப்படும் விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

14. **கையொப்பத்தை சான்றுபடுத்தல்** :- விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுபடுத்தப்படல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தில் பரீட்சைக்கு விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமும், அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு ஒருவர், முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர் பௌத்த விகாரையின் தலைமை பிக்கு ஒருவர் அல்லது ஏனைய மதங்களின் புனிதத் தலம் ஒன்றுக்குப் பொறுப்பாக உள்ள அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்திலுள்ள ஒருவர் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தற்போது அரசாங்க நிறுவனமொன்றில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

15. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் என்ற நியமத்தின் அடிப்படையில் உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தொழில்சார் செயன்முறை மற்றும் தேகாரோக்கியம் குறித்து மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எவ்வாறாயினும் அவ்வாறு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதுவதாக அமைய மாட்டாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்று பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என தெரியவருமிடத்து பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

16. பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

17. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் அனைத்து விண்ணப்பதாரியும் இந்த வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

18. **விண்ணப்பிக்கும் முறை.-** சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டு இவ்வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் ஆகியவற்றை சான்றுப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022.04.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பணிப்பாளர நாயகம், அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவை வீதி, கொலன்னாவை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணபத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் தரம் III இற்கான (திறந்த) ஆட்சேர்ப்பு - 2022" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

19. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் மற்றும் ஒவ்வாமைகள் காணப்படுகின்றது எனக் கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலை சரியானதெனக் கொண்டு செயற்படுத்தல் வேண்டும்.

பொறியியலாளர் கே. பீ. வதுகே,
பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ,
2022, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம்**
**ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் பதவிகளுக்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல்**

☐
அலுவலக பாவனைக்காக

விண்ணப்பிக்கும் மொழி மூலம் :

சிங்களம் - 2 ☐
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

விண்ணப்பிக்கும் பதவி அல்லது பதவிகள் :-

| தொடரிலக்கம் | பதவி | தொடரிலக்கம் | பதவி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :...................................................................................................................
2. முழுப்பெயர் :...............................................................................................................................
3. தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
4. நிரந்தர முகவரி :..........................................................................................................................
5. பிறந்த தினம் : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6. தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. கல்வித் தகைமைகள் :

7.1 க. பொ. த. (சா/த) பரீட்சையின் விபரங்கள் :

பரீட்சை சுட்டெண் :..........................

i. முதலாம் அமர்வின் பெறுபேறு : ஆண்டு : ........................ மாதம் :........................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

ii. இரண்டாம் அமர்வின் பெறுபேறு : ஆண்டு : ........................ மாதம் :........................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

8. மேலதிக கல்வித் தகைமைகள் :

8.1 ஏனைய மேலதிக கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரம் :
வருடம் : ........................ மாதம் :........................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8.2 டிப்ளோமா/சான்றிதழ் பாடநெறிகள் :

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

9. பதவிக்குரியதாக பெற்றுக் கொண்டுள்ள சேவை அனுபவம் : ..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

10. தொழில்சார் தகைமைகள் : ..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

11. மேலதிக தொழில்சார் தகைமைகள் : ..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

12. தற்போது ஏதேனும் பதவியை வகிப்பின் அது குறித்த விபரங்கள் :

(i) பதவி மற்றும் தரம் : ..................................................................
(ii) நியமனத் திகதி : ..................................................................
(iii) நிறுவனம் : ..................................................................
(iv) அப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமானதா என்பது பற்றி :
..........................................................................................................................................

13. தாங்கள் எப்போதாவது ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றமொன்றினால் தவறாளராக்கப்பட்டுள்ளீரா? (சம்பந்தப்பட்ட கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக. ஆம் எனில் விபரம் தருக.) :

ஆம் : ☐ இல்லை : ☐

14. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ் விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் நான் அறிந்த வகையில் உண்மையானதும், சரியானதும் என மரியாதையுடன் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஏதேனும் பகுதிகள் பூர்த்தி செய்யப்படாது/ அல்லது தவறான முறையில் பூர்த்தி செய்வதனால் ஏற்படும் இழப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்கின்றேன். மேலும் இங்கு சகல விபரங்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் குறிப்பிடப்பட்டுள்ள கூற்று போலியானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனம் பெறப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் பின்னர் மாற்றப்படாது.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இங்கு இவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் ..................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் ................................ திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

-------------------,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
உத்தியோகபூர்வ முத்திரை :-----.

16. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் இருப்பவராயின், திணைக்களத்/ நிறுவனத் தலைவரின் சான்றுரை :

இங்கு திரு./ திருமதி/ செல்வி ..................................... அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் நிரந்தர பணியாளராக சேவையாற்றுகிறார் எனவும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் அறியத்தருகிறேன்.

-------------------,
திணைக்களத்/நிறுவனத் தலைவரின்
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :-----.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
உத்தியோகபூர்வ முத்திரை :-----.

03-193

---

## அறிவித்தல்

## கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்டத் தொழில்நுட்பவியல் சேவை (PL 3) வகுதிக்கு (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரல் - 2022

1. அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பின்வரும் ஆரம்ப மட்டத் தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் ஆரம்ப மட்டத் தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அலுமினியம் பொருத்துனர் (Aluminum Fabricator ) | 01 |
| கோர் செய்பவர் (Core maker) | 01 |
| மின்னிணைப்பாளர் (Electric Motor Winding) | 01 |
| மின்னியல் உலோகம் பூசுபவர் (Electroplater) | 01 |
| உலோக பொருத்துனர் (Metal Processor) | 06 |
| கனரக வாகனங்களை இயக்குபவர் (Heavy Vehical Operator) | 03 |
| குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி தொழில்நுட்பவியலாளர் (Refrigeration and air Condition Operator) | 01 |
| காய்ச்சி இணைப்பவர் (Welder) | 03 |
| பெனார்ஸ் வேலை செய்பவர் (Furnceman) | 02 |
| அச்சு வார்ப்பவர் (Molder) | 01 |
| மொத்தம் | 20 |

3.0 **சம்பள அளவுத்திட்டம்**.-

3.1 சம்பளக் குறியீட்டு இல. : PL 3 - 2016

3.2 சம்பள அளவுத்திட்டம் : ரூபா 25,790 - 10 × 270 - 10 × 300 - 10 × 330 - 12 × 350 - ரூபா 38,990.00

3.3 ஆரம்ப சம்பளப்படி -

| தரம் | ஆரம்ப சம்பளப் படிநிலை | அடிப்படைச் சம்பளம் (ரூ.) |
|---|---|---|
| III | படிநிலை 01 | ரூபா 25,790 |
| II | படிநிலை 12 | ரூபா 28,790 |
| I | படிநிலை 22 | ரூபா 31,820 |
| விசேட | படிநிலை 32 | ரூபா 35,140 |

* அரசாங்கத் தொழிற்சாலையில் காணப்படும் C, CE மற்றும் J வகுப்புகளின் வாகனங்களை இயக்குவதற்கான அனுமதிப்பத்திரங்களுடன் அவ் வகுப்புகளுக்குரிய வாகனங்களை இயக்குவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கனரக வாகனங்களை இயக்குபவர்களுக்கு மட்டும் அச் சம்பள அளவுத்திட்டத்தில் 4 ஆவது அடிப்படைச் சம்பளத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4.0 **பதவியின்/பதவிகளின் தன்மை**.- நிரந்தரமானதும் ஒய்வூதியம் உரித்துடையதுமாகும். (ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.)

5.0 **ஆட்சேர்ப்புச் செய்யும் தரம்** : தரம் III

6.0 **மொழிமூலம்** : சிங்களம் மற்றும் தமிழ்

7.0 வழங்கப்படும் கடமைகளும் பொறுப்புக்களும் :-

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | கடமைகளும் பொறுப்புகளும் |
|---|---|
| அலுமினியம் பொருத்துநர் | அலுமினிய பாகங்களை இணைப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |

| அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | கடமைகளும் பொறுப்புகளும் |
|---|---|
| கோர் செய்பவர் | உருக்கி வார்ப்பு செய்கையில் அவசியமான சகல முறைகளிலும் கோர் தயாரிப்பினை செய்தல், அவ்வாறு உருக்கி செய்யப்படும் தயாரிப்புகளுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| மின்னிணைப்பாளர் | மின் மோட்டார்களின் சகல இலத்திரனியல் புதுப்பித்தல் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல், ஆமேச்சர் சுற்று செயற்பாடுகள் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| மின்னியல் உலோகம் பூசுபவர் | இலத்திரனியல் உலோக பூச்சுகளுக்குத் தேவையான பகுதிகளை தயாரித்தலும், வெண் இரும்பு பித்தளைப் பொருட்களை மெருகூட்டல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| உலோக பொருத்துனர் | வைத்தியசாலைகளுக்கான உபகரணங்களைத் தயாரித்தல், தகடுகளைப் பயன்படுத்தி படிவங்களைத் தயாரித்தல், தகடுகளில் எழுத்துக்கள் வெட்டுதல், நிறப்பூச்சுகளை பூசும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| கனரக வாகனங்களை இயக்குபவர் | கனரக வாகனங்களை இயங்க வைத்தல் மற்றும் அவ் வாகனங்களில் எளிய வேலைகளை செய்தல். |
| குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி தொழில்நுட்பவியலாளர் | சகல வகையான வளிச் சீராக்கிகளின் சேவைகளை செய்தல், புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அச் செயற்பாடுகளுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| காய்ச்சி இணைப்பவர் | கேஸ், இலத்திரனியல், Tig மற்றும் Mig இயந்திரங்களை பயன்படுத்தி சகல இணைப்பு நடவடிக்கைகளையும் (பித்தளை, அலுமினியம், இரும்பு, கலப்பு பொருட்கள் மற்றும் வெண் இரும்பு பூசும் நடவடிக்கைகள்) இப் பணிகளுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| பெனார்ஸ் வேலை செய்பவர் | உருக்கும் போது அவசியமான அடுப்புகளை செயற்படுத்தல், அடுப்புகளைப் புதுப்பித்தல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| அச்சு வார்ப்பவர் | உருக்குவதற்குத் தேவையான உருக்கு அச்சுகளை தயாரிப்பதற்காக அவற்றைத் தயார்படுத்தல், உருக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |

8.0 இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண்கால அடிப்படையிலானது. நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலத்தை நீடிப்பதற்கு அல்லது நியமனத்தை முடிவுறுத்துவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

9.0 **தகைமைகள்** :

I. **கல்வித் தகைமைகள்** : கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** .- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 28/2016 ஆம் இலக்கத்தின்படி துறைக்கான NVQ 03 அல்லது NVQ 04 ஆம் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருப்பின் இலக்கம் I இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் உரித்தாகாது.

II. **தொழிற் தகைமைகள்** : ஒவ்வொரு பதவியினதும் கடமைகளுக்கும் பொறுப்புகளுக்குமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் திறன்களில் (NVQ 04) நான்காம் மட்டத்திற்கு குறையாத நிபுணத்துவத்தைப் பெற்றிருத்தல்.

அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் ஆரம்ப மட்டத் தொழில்நுட்பவியல் சேவை வகுதிக்கு (திறந்த) அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தொழில்சார் தகைமைகள்

| தொடரிலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|
| 1. | அலுமினியம் பொருத்துநர் | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல். |
| 2. | கோர் செய்பவர் | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் ஆகக் குறைந்தது ஓராண்டுப் பாடநெறியைப் பயின்று சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் மற்றும் பின்வரும் தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>II. விசேட வேலைகளுக்குப் பொருத்தமான கோர் காய்ச்சி இணைப்பு அல்லது அச்சு வார்ப்புச் செய்தல் தொடர்பாக திட்டமிடும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>III. பல்வகையான அளவுகளில் மணல் கோர் மற்றும் வடிவங்களுக்காக காற்றோட்டம் மற்றும் பேக்கின் முறைகள் தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்.<br>IV. கோர் மண் மணல் கலப்பினை தயாரித்து ரேம் செய்து ரேன்போஸ் செய்து காற்றோட்டத்தை விடுத்தும் ட்ரேஸ் கோர் தயாரித்து கோர் பெட்டியொன்றை தயாரித்தல்.<br>V. ஒயில் சேன்ட் கலப்பினை தயாரித்தல் மற்றும் அதனூடாக கோர் தயாரிப்பதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>VI. பெரஸ், நிபெரஸ் விசேட வேலைக்காக காய்ந்த, கிரீன்ட் மற்றும் லோம் வகையின் கோரினைத் தயாரிப்பதற்குத் தேவையான மண் கலவையை நியம விகிதாசாரத்தில் கலத்தல் வேண்டும்.<br>VII. லோம் சேன்ட் ஊடாக குழாய் கோரினைத் தயாரித்தல் மற்றும் அதே மாதிரியில் துணைக்கோர் பெட்டியின் மீது அல்லது டெம்ப்லேட் உதவியுடன் கோரினைத் தயாரித்தல் வேண்டும்.<br>VIII. மோல்ட் தயாரித்தல் தொடர்பான அறிவு மற்றும் நிபுணத்துவத்தில் சிறந்த மட்டத்தில் இருத்தல் வேண்டும். |
| 3. | மின்னிணைப்பாளர் | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல். |

| தொடரிலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|
| 4. | மின்னியல் உலோகம் பூசுநர் | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது ஓராண்டு பாடநெறியைப் பயின்று சித்தியடைந்து பெறப்பட்ட சான்றிதழ் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>II. மின்னியல் உலோகம் பூசுவதற்கு முன்னர் சுத்திகரிப்பு செய்யும் பாத் இனைத்தயாரிக்க பயன்படுத்தும் பல்வேறு சோல்ட் வகைகள் மற்றும் இரசாயனப் பொருட்களின் விகிதாசாரங்களை மிகத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.<br>III. பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய எனோட் வகைகள் குறித்து நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.<br>IV. நிகல் பிளேட் அல்லது குரோமியம் பிளேட்டிற்காக சுத்திகரிப்பு செய்யும் மற்றும் மின்னியல் உலோக பூசுகைக்கான பாத் இனைத்தயாரிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>V. மூன்று பொலிஷின் மொப்ஸ் வகைகளைப் பயன்படுத்துவதற்கு நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.<br>VI. பொலிஷின் துணிகள், பைபர் வயர் மோப்ஸ் மற்றும் எமரி வீல்சுடன் பயன்படுத்தப்படும் பல்வேறு கொம்பவுன்டுகள் பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.<br>VII. வழங்கப்படும் தகட்டினை சரியான முறையின் படி பல்வேறு சுத்திகரிப்பு பாத் இனைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு செய்வதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும். அதன் பின்னர் பரிசீலனை செய்து செயற்பாடு சரியாக உள்ளமையை உறுதிப்படுத்தல். |
| 5. | உலோக பொருத்துநர் | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல். |
| 6. | கனரக வாகனங்களை இயக்குபவர் | I. கனரக வாகனங்களை இயக்குவது தொடர்பாக ஆகக் குறைந்தது பத்து (10) வருடங்கள் அங்கீகரிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான நிறுவனமொன்றில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>II. கனரக வாகனங்களின் பராமரிப்பு தொடர்பாக அடிப்படை அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>III. பிரய்ம் மூவர் ரெய்லரினை இயக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>IV. கிறேன் இயந்திரத்தை இயக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>V. லொறி மற்றும் போக்லிப்டினை இயக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>VI. NVQ நான்காம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல். |

| தொடரிலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|
| 7. | குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி தொழில்நுட்பவியலாளர் | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல். |
| 8. | காய்ச்சி இணைப்பவர் | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சியைப் பெற்றிருத்தல். |
| 9. | பெனார்ஸ் வேலை செய்பவர் | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் ஆகக் குறைந்தது ஓராண்டுப் பாடநெறியைப் பயின்று சித்தியடைந்து பெறப்பட்ட சான்றிதழ் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>II. பெரஸ் மற்றும் நிபெரஸ் பிரிவுகளில் உள்ள பல்வேறு உலோக (எலோய்ஸ்) பகுதிகள் உடைதல் மற்றும் ஏனைய முறைகள் ஊடாக இனங்காணக்கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>III. நன்பெரஸ் பர்னஸ், குரூசிபல்ஸ், குரூசிபல் அல்லாத, ஒயில் பயர்ட் பெனார்ஸ் மற்றும் கியூபோலா ஆகியவற்றை இயக்குவதற்கும் புதுப்பித்து பராமரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் இருத்தல்.<br>IV. கியூபோலாவிற்கும் பெனார்சிற்கும் இணையும் பிலோவர்ஸ், பெனார்ஸ், உயர்த்தல் மற்றும் மூலப்பொருட்கள் உள்ளடக்கும் உபகரணங்கள் மற்றும் பாரம் அளக்கும் அனைத்து இயந்திரங்களையும் இயக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>V. உருக்கப்பட்ட உலோகத்தின் வெப்பநிலையை அளவிடுதற்காக பைரோ மீட்டரைப் பயன்படுத்துவதற்கான அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும்.<br>VI. பெரஸ்/ நிபெரஸ் இனை உருக்கும் போது பயன்படுத்தும் கியூபோலா/ அடுப்புகளில் டெப் செய்து பெறப்படும் உலோக திரவம் அல்லது எரிபொருள் மற்றும் வாயுவின் கலவை விகிதாசாரங்களின் படி வெளியேறும் புகையினை பரிசோதனை செய்கையில் உருகும் உலோகத்தின் வெப்பம் தொடர்பாக சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.<br>VII. உருக்கும் போது பயன்படுத்தப்படும் எரிபொருள் மற்றும் உலோகங்களுக்கிடையிலான விகிதாசாரங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டியதோடு, மிகவும் சிக்கனமான முறையில் விளைதிறன் மட்டங்கள் எவையென என்பதை அறிந்திருத்தல் வேண்டும். |

| தொடரிலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|
| 10. | அச்சு வார்ப்பவர் | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு பாடநெறிகளைப் பயின்று பெற்றுக்கொண்ட சான்றிதழ் மற்றும் பின்வரும் தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ் களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>II. பெரஸ் மற்றும் நிபெரஸ் வார்ப்புகளுக்காக ஈர மண், உலர்ந்த மற்றும் லோம் ஆகிய கலவையின் பிணைப்பினை தீர்மானித்து குறித்த மூலப்பொருட்களுக்குப் பொருந்தும் விதத்தில் குறித்த வார்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கு அச்சுகளுக்கு மட்ட ஊசிகளைப் பயன்படுத்தும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>III. பெரஸ் மற்றும் நிபெரஸ் மூலங்களின் பல்வேறு கோர் வார்ப்பு அச்சினை சிறந்த முறையில் தயாரிப்பதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>IV. லோம் மண் மூலம் பூ வடிவ வார்ப்பு அச்சுகளைத் தயாரிப்ப தற்கான அறிவு இருத்தல் வேண்டும்.<br><br>V. தற்போது மூலப்பொருட்களைப் பயன்படுத்தி விசேட வேலைகளுக்காகவும் சாதாரண பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் மோல்டின் பெட்டி சட்டங்கள், உயர்த்திகள் மற்றும் சிட் சக்தியை தயாரித்து மேலும் விரிவாக்கி விளைதிறனான முறையில் பயன்படுத்துவதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>VI. உருக்கப்பட்ட உலோகத்தின் சாதாரண நிலையை பரிசோதனை செய்து அவ் உலோகத்தை அச்சுகளுக்கு வார்ப்பு செய்வதற்கு பொருத்தமான சந்தர்ப்பத்தை தீர்மானித்து உதவியாளர்கள் மற்றும் லெடலினை இயக்குபவர்களை தயார்படுத்தி அச்சு வார்ப்பினை செய்வதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br><br>VII. பெரஸ் மற்றும் நிபெரஸ் அச்சு வார்ப்புகளில் பயன்படுத்தும் சிலின் தொழில்நுட்பம் தொடர்பாக சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.<br><br>VIII. கோர் தயாரித்தல் தொடர்பாக சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |

III. **அனுபவம்** : அரசாங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் இரண்டு வருட (02) அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

IV. **உடல்சார் தகைமைகள்** : சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமை பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

V. **ஏனையவை** :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
II. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

III. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியதாக கருதப்படுவது, விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் மட்டுமே ஆகும்.

10. **வயது**.-

10.1 ஆகக் குறைந்த வயதெல்லை : 18 வயதுக்குக் குறையாது

10.2 ஆகக் கூடிய வயதெல்லை : 45 வயதுக்கு மேற்படாது.
(விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று)

11. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- தொழில்சார் செயன்முறைப் பரீட்சையிலும் தேகாரோக்கிய மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளில் திறமைகளின் ஒழுங்கு வரிசைப்படியும் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமையவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**தொழில்சார் பரீட்சை - செயன்முறை பரீட்சை**

| விடயம் | விடயப்பரப்பு | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|---|
| விடய அறிவு | 1. **அலுமினியம் பொருத்துநர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. யன்னலை தயாரித்து பொருத்துதல்.<br>b. கதவுகளைத் தயாரித்து பொருத்துதல்.<br>c. அலுவலகம் மற்றும் விற்பனை அறைகள் எனப் பாகங்களாக வேறாக்கிப் பொருத்துதல்.<br>d. பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக அலுமாரிகளைத் தயாரித்தல்.<br>e. குளியலறைக்கான மறைப்புகளைத் தயாரித்தல் மற்றும் பொருத்துதல்.<br>f. கூரைத் தகடுகளை (Ceiling) தயாரித்து பொருத்துதல்.<br>g. பல்வேறு அலுமினிய உருப்படிகளைத் தயாரித்தல்.<br>h. ஏணிகளைத் தயாரித்தல்.<br>i. படிக் கட்டுகளைத் தயாரித்தல்.<br>j. கதவுகள் மற்றும் வண்ணக் கண்ணாடிகளைப் பொருத்துதல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |

| விடயம் | விடயப்பரப்பு | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|---|
| | **2. கோர் செய்பவர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. கோர் மண் மணல் கலவையை தயாரித்து ரேம் செய்து ரேம்போஸ் செய்து வென்ட் டெலிவரி மற்றும் டிரேஸ் கோர் தயார் செய்து கோர் பெட்டியொன்றை தயாரித்தல்.<br>b. பெரஸ்/ நிபெரஸ் வேலைகளுக்குத் தேவையான கோர் மணற் பசை மற்றும் ட்ரசின் கலவையின் பிணைப்பை சரியாகப் பயன்படுத்தி கோர் மணற் கலவையைத் தயாரித்தல்.<br>c. விசேட வேலைகள், சிக்கலான மற்றும் கோர் பலவற்றைக் கொண்ட வேலைகள் பெக்கின் பிளொக் இற்கான கோர் செட்டினை செய்யும் போது தேவையான பேர்க்கின் பிளொக் டெம்ளேட் மற்றும் கேஜஸ் இனைப் பயன்படுத்தி தயாரித்தல்.<br>d. ஒயில் சேன்ட் கலவையைத் தயாரித்தல் மற்றும் அதன் மூலம் கோர் தயாரிப்பதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>**3. மின்னிணைப்பாளர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. மின்னியல் இயந்திரங்களின் வயர்களை மீள இணைத்தல்.<br>b. மின்னியல் இயந்திரங்களில் ஏற்படக் கூடிய பழுதுகளை பரிசீலித்து இனங் காணும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>c. டிராம்ஸ்போமரை இணைத்தல் மற்றும் மீண்டும் இணைப்பதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும். | | | |

| விடயம் | விடயப்பரப்பு | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|---|
| | **4. மின்னியல் உலோகம் பூசுநர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. சுத்தம் செய்யும் மற்றும் மின்னியல் உலோகத்தைப் பூசுவதற்கான பாத் இனைத் தயாரித்தல் வேண்டும்.<br>b. வழங்கப்படும் தகட்டினை சரியான முறையில் பல்வேறு சுத்தப்படுத்தும் பாத்தினை பயன்படுத்தி சுத்தப் படுத்தல்.<br>c. நிக்கல் அல்லது குரோமியம் தகடுத் துண்டுகளை பப் செய்து சுத்தப்படுத்தி மின்னியல் உலோகத்தைப் பூசி மெரு கூட்டல் வேண்டும்.<br>**5. உலோகம் பொருத்துநர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. உலோகங்களை வெட்டுவதற்கான அடையாளங்களை இடும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>b. உலோகம் பொருத்தப்பட்ட உலோகப் பகுதிகளை இணைத்தல் வேண்டும்.<br>**6. கனரக வாகனங்களை இயக்குபவர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. பயணிகள் பேரூந்து ஒன்றை செலுத் துதல் வேண்டும்.<br>b. பொருட்களைக் கொண்டு செல்லும் லொறியொன்றை செலுத்துதல் வேண்டும்.<br>c. போர்க் லிப்ட் இயந்திரத்தை செயற் படுத்தும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>d. கனரக வாகனங்களின் பராமரிப்புத் தொடர்பான அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும். | | | |

| விடயம் | விடயப்பரப்பு | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|---|
| | 7. **குளிரூட்டி மற்றும் வளிச் சீராக்கி தொழில்நுட்பவியலாளர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் விடயத் துறைகள் இரண்டில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. வின்டோஸ் மற்றும் ஸ்ப்லிட் வகை வளிச் சீராக்கிகளைப் பொருத்துதல்.<br>b. வின்டோஸ் மற்றும் ஸ்ப்லிட் வகை வளிச் சீராக்கிகளைப் புதுப்பித்தல்.<br>c. சென்ரல் வளிச் சீராக்கி முறைமையை செயற்படுத்தல் மற்றும் புதுப்பித்தல்.<br>d. அதிகூடிய குளிரூட்டி முறைமையை செயற்படுத்தல் மற்றும் புதுப்பித்தல்.<br>8. **காய்ச்சி இணைப்பவர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் விடயத் துறைகள் நான்கில் சித்தியடைதல் வேண்டும்.<br>NVQ நான்காம் மட்டம் ஆர்க் காய்ச்சி இணைப்பு<br>a. ஒக்சி எசிட்லின் கேஸ் ஊடாக இரும்பினை வெட்டுதல்.<br>b. பிளேட் அமைக்கும் ஆர்க் முறையில் காய்ச்சி இணைத்தல் (IG மற்றும் 1F)<br>c. கிடைமட்டத்தை அமைக்கும் போது இரும்புத் தகடு மெனுவல் ஆர்க் முறைக்கு காய்ச்சி இணைத்தல் (3G)<br>d. ஓவர்ஹெட் முறையில் இரும்புத் தகடு மெனுவல் ஆர்க் முறைக்கு காய்ச்சி இணைத்தல். (4G)<br>e. சோல்டரின் மற்றும் பிறேசின் செய்தல். | | | |

| *விடயம்* | *விடயப்பரப்பு* | *காலம்* | *மொத்தப் புள்ளி* | *சித்தியடையும் புள்ளி* |
|---|---|---|---|---|
| | **9. பெனார்ஸ் வேலை செய்பவர்**<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. வழங்கப்படும் விபரக் குறிப்பின் படி அடுப்புகள்/கியுபோலாவ ஆகியவற்றை செயற்படுத்தலுக்கான உலோகப் பொருட்களின் நியம நிறையை இனங் கண்டு நிறையிட்டு அடுப்பு/ கியுபோ லாவ ஆகியவற்றை உரிய முறையில் செயற் படுத்தல்.<br>b. பெரஸ்/ நிபெரஸ் பிரிவுகளில் பயன்படுத்தும் பொது உலோக வகை களை இனங்காணக்கூடியதோடு கியூபோ லாவைப் பயன்படுத்தும் சரியான கோக் கிரேட்டை இனங்காணக் கூடியதாக இருத்தல்.<br>c. பெர்னாஸ் இனைச்செயற்படுத்துவதற்கு ஆரம்பித்த பின்னர் அவசியமான உலோகப் பகுதிகளை சார்ஜ் செய்து உருக்கி கழிவுப் பொருட்களை அகற்றி திரவமாகிய உலோகத்தைப் பெற்று பெர்னர் இனைத் தம்மால் நிறுத்துவதற்கான ஆற்றல் இருப்பதோடு உதவியாளர்களைக் கொண்டு சிறந்த முறையில் அச்சு வார்ப்பினை பெற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>d. கியூபோலாவிற்கும் பெர்னாஸ் இற்கும் இணைப்பாக காணப்படும் பிளோவர்ஸ், பெர்னாஸ், உயர்த்திகள் மற்றும் மூலப்பொருட்களை உள்ளடக்கும் உபகரணங்கள் மற்றும் எடையிடும் சகல இயந்திரங்களையும் இயக்குவதற்கான ஆற்றல் இருத்தல் வேண்டும்.<br>e. பெர்ஸ் மற்றும் நிபெரஸ் பிரிவுகளில் உள்ள பல்வேறு உலோகப் (எலோய்ஸ்) பகுதிகள் உடைவதாலும் அல்லது ஏனைய முறைகள் ஊடாக இனங்காணக்கூடிய ஆற்றல் வேண்டும். | | | |

| விடயம் | விடயப்பரப்பு | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடையும் புள்ளி |
|---|---|---|---|---|
| | NVQ நான்காம் மட்டம் டிக் காய்ச்சி இணைப்பு<br>a. ஒக்சி எசிட்லின் கேஸ் ஊடாக இரும்பினை வெட்டுதல்.<br>b. பிளேட் அமைக்கும் போது இரும்புத் தகடு ஒக்சி எசிட்லின் முறையில் காய்ச்சி இணைத்தல்.<br>c. கிடைமட்டத்தை அமைக்கும் போது இரும்புத் தகடு ஒக்சி எசிட்லின் கேஸ் முறையில் காய்ச்சி இணைத்தல்.<br>d. நிலைகுத்துமட்டத்தை அமைக்கும் போது இரும்புத் தகடு ஒக்சி எசிட்லின் கேஸ் முறையில் காய்ச்சி இணைத்தல். (3G)<br>e. ஓவர்ஹெட் முறையில் இரும்புத் தகடு ஒக்சி எசிட்லின் கேஸ் முறைக்கு காய்ச்சி இணைத்தல் (4G)<br>f. அனைத்தையும் அமைக்கும் போது இரும்பு குழாய் ஒக்சி எசிட்லின் கேஸ் முறையில் காய்ச்சி இணைத்தல். (6G)<br>*10.* ***அச்சு வார்ப்பவர்***<br>செயன்முறை பரீட்சையில் பின்வரும் விடயத் துறைகள் இரண்டில் சித்தியடைதல் வேண்டும்.<br>a. ஈர மண் அல்லது உலர்ந்த மண்ணைப் பயன்படுத்தி சிக்கலான பகுதிகள் மூன்று அல்லது இரண்டினை நடுத்தர அளவில் அச்சு வார்ப்பினை பெரஸ் அல்லது நிபெரஸ் வார்ப்பிற்காக தயார் செய்தல் வேண்டும். தயாரிக்கப்பட்ட அச்சினை வார்ப்பு பரிசோதனைக்கு திருப்திகரமான முறையில் பயன் படுத்தல் வேண்டும்.<br>b. மூன்று அல்லது இரண்டு வார்ப்பு அச்சு ஒன்றினைத் தயாரிப்பதற்காக உலர் மண்ணை அல்லது ஈர மண்ணை தயார்படுத்திக் கொண்டு சிக்கலான அல்லது நடுத்தர அளவில் வார்ப்பு அச்சினை பெரஸ் அல்லது நிபெரஸ் உலோகங்களினால் தயாரித்தல். இவ் வார்ப்பு அச்சினை திருப்திகரமான முறையில் அச்சு வார்ப்பு பரிசோதனைக்கு உட்படுத்தல் வேண்டும். | | | |

**தேகாரோக்கியம் குறித்த மதிப்பீட்டுப் பரீட்சை**

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *புள்ளிகள் வழங்கப்படும் முறை* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | * க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் பாடமொன்றுக்கு 04 புள்ளிகள் வீதம் 03 பாடங்களுக்கு 12 புள்ளிகளும் | 12 புள்ளிகள் |
| | | * அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா அல்லது அதற்கும் மேலான தகைமை களைப் பெற்றவர்களுக்கு 04 புள்ளிகளும் | 04 புள்ளிகள் |
| | | * அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுமதிக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்துள்ள சான்றிதழ் பாடநெறிக்காக 04 புள்ளிகள் | 04 புள்ளிகள் |
| சேவை அனுபவம் | 40 | அங்கீகரிக்கப்பட்டதும் அரசினால் பதிவு செய்யப்பட்டது மான நிறுவனம் ஒன்றில் குறித்த துறையில் சேவை அனுபவமானது (2 வருடங்கள்) 05 வருடங்களுக்கு மேற்படுகையில் ஒரு வருடத்திற்கு 08 புள்ளிகள் வீதம் | 40 புள்ளிகள் |
| பயிற்சிப் பாடநெறிகளைப் பயின்றிருத்தல் | 15 | தகைமைகள் கோரப்படும் துறையில் 06 மாதங்களுக்கு குறையாத பயிற்சி பாடநெறிக்காக 10 புள்ளிகளும், இயந்திரவியல் பொறியியல் துறையில் ஏனைய பயிற்சிப் பாடநெறிகளுக்காக 05 புள்ளிகளும் வழங்கப்படும் | 15 புள்ளிகள் |
| விடயப்பரப்பிற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் | 20 | விளையாட்டு சான்றிதழ்களுக்காக மாகாண மட்ட வெற்றிகளுக்கு 05 புள்ளிகளும்/முழு இலங்கை ரீதியான வெற்றிகளுக்காக 10 புள்ளிகளும் (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளுக்காக) பாடசாலை மாணவர் தலைவர் பதவிக்காக 05 புள்ளிகள் உரித்தாகும். | 20 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை | 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமையின் படி புள்ளிகள் வழங்கப்படும். | 05 புள்ளிகள் |
| மொத்தம் | | 100 | |

**குறிப்பு** .- பதவிக்காகப் பெறப்பட்டுள்ள சேவை அனுபவங்கள் அங்கீகரிக்கப்படக்கூடிய சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

12. விண்ணப்பங்களை பூர்த்தி செய்கையில் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். தகைமைகளை பரிசீலிக்கும் போது ஏதேனுமொருவர் தகைமையற்ற விண்ணப்பதாரி என தெரியவருமாயின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியானது என அறியக் கிடைத்தால் அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியும்.

13. **கையொப்பத்தை சான்றுப்படுத்தல்.-** விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தில் பரீட்சைக்கு விண்ணப்பத்தாரர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமும், அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை அதிபர், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு

ஒருவர், முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர், பௌத்த விகாரையின் தலைமை பிக்கு ஒருவர் அல்லது ஏனைய மதங்களின் புனிதத் தலம் ஒன்றுக்குப் பொறுப்பாக உள்ள அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க அந்தஸ்திலுள்ள ஒருவர் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தற்போது அரசாங்க நிறுவனமொன்றில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

14. குறித்த மாதிரி படிவத்திற்கு அமைவாக விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்திசைவாக அமையாத விண்ணப்பப்படிவங்கள், பூரணமற்ற நிலையில் காணப்படும் விண்ணப்பப் படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

15. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் என்ற நியமத்தின் அடிப்படையில் உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தொழில்சார் செயன்முறை மற்றும் தேகாரோக்கியம் குறித்து மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எவ்வாறாயினும் அவ்வாறு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதுவதாக அமைய மாட்டாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்று பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லை என தெரியவருமிடத்து பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.

**16. பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.**

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

17. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் அனைத்து விண்ணப்பதாரியும் இந்த வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

18. **விண்ணப்பிக்கும் முறை.**- சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டு இவ்வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் ஆகியவற்றை சான்றுப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022.04.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பணிப்பாளர் நாயகம், அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களம், கொலன்னாவை வீதி, கொலன்னாவை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆரம்ப மட்டத் தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் தரம் III இற்கான (திறந்த) ஆட்சேர்ப்பு - 2022" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

19. சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்படும் அறிவித்தலின் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் மற்றும் ஒவ்வாமைகள் காணப்படுகின்றது எனக் கண்டறியப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தலை சரியானதெனக் கொண்டு செயற்படுத்தல் வேண்டும்.

பொறியியலாளர் கே. பீ. வதுகே,
பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ,
2022, மாச்சு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களம்

## ஆரம்ப மட்டத் தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் பதவிகளுக்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல்

☐
அலுவலக பாவனைக்காக

விண்ணப்பிக்கும் மொழி மூலம் :

*சிங்களம் - 2*
*தமிழ் - 3* ☐
*ஆங்கிலம் - 4*

விண்ணப்பிக்கும் பதவி அல்லது பதவிகள் :-

| *தொடரிலக்கம்* | *பதவி* | *தொடரிலக்கம்* | *பதவி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :.......................................................................................................................

2. முழுப்பெயர் :.........................................................................................................................................

3. தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4. நிரந்தர முகவரி :...................................................................................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

7. கல்வித் தகைமைகள் :

7.1 க. பொ. த. (சா./த.) பரீட்சையின் விபரங்கள் :

பரீட்சை சுட்டெண் :..........................

i. முதலாம் அமர்வின் பெறுபேறு : ஆண்டு : ........................ மாதம் :........................

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

ii. இரண்டாம் அமர்வின் பெறுபேறு : ஆண்டு : ........................ மாதம் :........................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

7.2 க. பொ. த. (உ./த.) பரீட்சையின் விபரங்கள் :

i. பரீட்சை ஆண்டு மற்றும் மாதம் :........................

ii. பரீட்சை சுட்டெண் :........................

பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8. மேலதிக கல்வித் தகைமைகள் :

8.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரம் :

i. பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் :........................

ii. பரீட்சை சுட்டெண் :........................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8.2 டிப்ளோமா/சான்றிதழ் பாடநெறிகள் :

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

9. தொழில்சார் தகைமைகள் : ..............................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

10. பதவிக்குரியதாக பெற்றுக் கொண்டுள்ள சேவை அனுபவம் : ..............................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................

11. பயின்றுள்ள பயிற்சிப் பாடநெறிகள் : .....................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................

12. விடயம் சார்ந்த செயற்பாடுகள் : ..........................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................
...................................................................................................................................................

13. தற்போது ஏதேனும் பதவியை வகிப்பின் அது குறித்த விபரங்கள் :

(i) பதவி மற்றும் தரம் : ...................................................................
(ii) நியமனத் திகதி : ...................................................................
(iii) நிறுவனம் : ...................................................................
(iv) அப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமானதா என்பது பற்றி : ..................................................

14. தாங்கள் எப்போதாவது ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றமொன்றினால் தவறாளராக்கப்பட்டுள்ளீரா? (சம்பந்தப்பட்ட கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக. ஆம் எனில் விபரம் தருக.) :

ஆம் ☐ இல்லை ☐

15. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ் விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் நான் அறிந்த வகையில் உண்மையானதும், சரியானதும் என மரியாதையுடன் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஏதேனும் பகுதிகள் பூர்த்தி செய்யப்படாது/ அல்லது தவறான முறையில் பூர்த்தி செய்வதனால் ஏற்படும் இழப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்கின்றேன். மேலும் இங்கு சகல விபரங்களும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் குறிப்பிடப்பட்டுள்ள கூற்று போலியானது என நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனம் பெறப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் பின்னர் மாற்றப்படாது.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இங்கு இவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் ..................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் ................................ திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

-------------------------,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
உத்தியோகபூர்வ முத்திரை :-----.

17. அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் இருப்பவராயின், திணைக்களத்/ நிறுவனத் தலைவரின் சான்றுரை :

இங்கு திரு./ திருமதி/ செல்வி ..................................... அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் நிரந்தர பணியாளராக சேவையாற்றுகிறார் எனவும், இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் அறியத்தருகிறேன்.

-----------------------,
திணைக்களத்/நிறுவனத் தலைவரின்
கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :-----.

சான்றுப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
உத்தியோகபூர்வ முத்திரை :-----.

03-194

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.